மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் மா.சுப்பிரமணியன் முன்னிலையில் நேற்று (31.10.2023), சென்னை, ஓமந்தூரார் அரசினர் தோட்டத்தில் உள்ள, தமிழ்நாடு அரசு பன்னோக்கு உயர் சிறப்பு மருத்துவமனை கூட்டரங்கில், மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறைக்கும் கோயம்புத்தூர் கங்கா மருத்துவமனைக்கும் இடையே, பாத மருத்துவம் நீரழிவு நோய் அறுவை சிகிச்சை சேவைகளுக்கான புரிந்துணர்வு ஒப்பந்தம் கையெழுத்தானது. இந்நிகழ்வில் மருத்துவம் மற்றம் மக்கள் நல்வாழ்வுத் துறை அரசு முதன்மைச் செயலாளர் ககன்தீப் சிங் பேடி, தேசிய நலவாழ்வுக் குழும இயக்குநர் திருமதி.ஷில்பா பிரபாகர் சதீஷ், தமிழ்நாடு சுகாதார அமைப்பு திட்ட இயக்குநர் ம.கோவிந்தராவ், மருத்துவக் கல்வி மற்றும் ஆராய்ச்சி இயக்குநர் மரு.இரா.சாந்திமலர், தமிழ்நாடு விபத்து மற்றும் அவசர முன்னெடுப்பு (TAEI) மாநில திட்ட மேலாளர் மரு.மருததுரை, கோயம்புத்தூர், கங்கா மருத்துவமனை இயக்குநர் மரு.ராஜசபாபதி மற்றும் உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

ஆலந்தூர் தெற்கு பகுதி தி.மு.க. சார்பில் பகுதிச் செயலாளர் என்.சந்திரன் தலைமையில் நங்கநல்லூர் பி.வி.நகரில் நடைபெற்ற முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் நூற்றாண்டு விழாவையொட்டி திராவிட மாடல் அரசின் சாதனைகளை மக்களிடம் விளக்கும் மாபெரும் பொதுக்கூட்டத்தில் குறு, சிறு நடுத்தரத் தொழில் நிறுவனங்கள் துறை அமைச்சர் தா.மோ.அன்பரசன் மற்றும் தலைமைக் கழக பேச்சாளர் சைதை சாதிக் ஆகியோர் கலந்துகொண்டு உரையாற்றி நலத்திட்ட உதவிகள் வழங்கினார்கள். அருகில் பகுதிச் செயலாளர் பி.குணாளன், எம்.எஸ்.கே.இப்ராஹிம், இ.உலகநாதன், மற்றும் கழக நிர்வாகிகள் உள்ளனர்.

வடகிழக்குப் பருவமழையை முன்னிட்டு - நகர்ப்புர

உள்ளாட்சி அமைப்புகளின் முன்னெச்சரிக்கை நடவடிக்கைகள்!

நகராட்சி நிருவாகத் துறை அமைச்சர் கே.என்.நேரு தலைமையில் ஆய்வுக் கூட்டம்!

சென்னை, நவ.1-

நகராட்சி நிருவாகத் துறை அமைச்சர் கே.என்.நேரு தலைமையில் நேற்று (31.10.2023) தலைமைச் செயலகத்தில், வடகிழக்கு பருவமழையினை முன்னிட்டு நகர்ப்புர உள்ளாட்சி அமைப்புகளில் மேற்கொள்ளப்பட்டுள்ள முன்னெச்சரிக்கை நடவடிக்கைகள் குறித்த ஆய்வுக் கூட்டம் நடைபெற்றது.

அதன் விபரம் வருமாறு:

நகராட்சி நிருவாகத் துறை அமைச்சர் கே.என்.நேரு தலைமையில் நேற்று (31.10.2023) தலைமைச் செயலகத்தில், 21 மாநகராட்சிகள், 138 நகராட்சிகள் மற்றும் 490 பேருராட்சி பகுதிகளில் வடகிழக்கு பருவமழையினை முன்னிட்டு மேற்கொள்ளப்பட்டுள்ள முன்னெச்சரிக்கை நடவடிக்கைகள் குறித்த ஆய்வுக் கூட்டம் நடைபெற்றது.

இக்கூட்டத்தில் அமைச்சர் கே.என்.நேரு பேசியதாவது:-

வடகிழக்குப் பருவமழையின்போது கனமழை மற்றும் புயலினால் ஏற்படும் பாதிப்புகளை எதிர்கொள்ளும் வகையில் தேவையான பாதுகாப்பு உபகரணங்கள், ஜெனரேட்டர்கள், ஜெ.சி.பி வாகனங்கள், கழிவுநீரகற்றும் வாகனங்கள், திடக்கழிவு மேலாண்மை வாகனங்கள் உள்ளிட்டவைகளை தயார் நிலையில் வைத்திருக்க வேண்டும். பருவமழையின்போது தாழ்வான இடங்களில் மேற்கொள்ளப்பட வேண்டிய முன்னேற்பாடு பணிகள் மற்றும் வெள்ள பாதிப்புகளிலிருந்து பொது மக்களை பாதுகாக்கும் பொருட்டு நிவாரணப் பணிகள் மேற் கொள்வதற்கு ஏதுவாக அலுவலர்களைக் கொண்டு சிறப்பு குழுக்கள் அமைக்கப்பட வேண்டும். மேலும், அனைத்து நகர்ப்புர உள்ளாட்சி அமைப்புகளின் அலுவலகங்களில் 24 மணி நேரமும் இயங்கக்கூடிய கட்டுப்பாட்டு அறைகள் அமைக்கப்பட வேண்டும்.

நகர்ப்புர உள்ளாட்சி அமைப்புகளுக்குட்பட்ட பகுதிகளில் உள்ள ஏரிகள், குளங்கள் போன்ற நீர்நிலைகள் யாவும் பருவமழையின் போது கிடைக்கக்கூடிய மழைநீரினைச் சேமிக்கும் வகையில் உள்ளதா என்பதைக் கண்டறிந்து உபரிநீர் வெளியேறும் பட்சத்தில் போதிய வாய்க்கால்கள் ஏற்படுத்தி குடியிருப்புப் பகுதிகளுக்குள் மழைநீர் செல்லாதவாறு முன்னெச்சரிக்கை நடவடிக்கைகளை சம்பந்தப்பட்ட அலுவலர்கள் மேற்கொள்ள வேண்டும்.

ஏரிகள் மற்றும் குளங்களுக்கு அருகில் வசிக்கக்கூடிய பொதுமக்களையும், தாழ்வான பகுதிகளில் குடியிருப்பவர்களையும் மாற்று இடங்களில் பாதுகாப்பாக தங்க வைப்பதற்கான நடவடிக்கைகளையும் மேற்கொள்ள வேண்டும். பொதுமக்களுக்கு பாதுகாப்பான குடிநீர் வழங்கிட வேண்டும். மேல்நிலை/கீழ்நிலை நீர்த்தேக்கத் தொட்டிகளை உரிய சுழற்சி முறையில் சுத்தம் செய்து குடிநீரில் போதிய குளோரின் கலந்து குடிநீர் விநியோகத்தைக் கண்காணிக்க வேண்டும்.

நகர்ப்புர உள்ளாட்சி அமைப்புகளில் செயல்படும் நகர்ப்புர ஆரம்ப சுகாதார நிலையங்களில் உள்ள மருத்துவர்கள், மருத்துவ உதவியாளர்கள், செவிலியர்கள் உள்ளிட்ட அனைத்து சுகாதாரப் பணியாளர்களும் தயார் நிலையில் இருப்பதை உறுதி செய்திட வேண்டும். மேலும், நடமாடும் சுகாதாரக் குழுக்களை அமைத்து மழையினால் பாதிப்பு ஏற்படும் பகுதிகளில் விரைவாக சென்று மருத்துவ உதவிகள் அளிக்கப்பட வேண்டும். நகர்ப்புர உள்ளாட்சி அமைப்புகளில் உள்ள அனைத்து சுகாதார மையங்களிலும் போதிய மருந்து இருப்பில் வைத்திருக்கப்பட வேண்டும். மேலும், மழைக்காலங்களில் நீர் தேங்கும் பகுதிகளில் உள்ள வடிகால்களில் அடைப்புகளைக் கண்டறிந்து மழைநீர் வடியும் வகையில் சம்பந்தப்பட்ட அலுவலர்கள் கண்காணிப்பு பணிகளை தினசரி மேற்கொள்ள வேண்டும். வடகிழக்கு பருவமழையின் போது பொதுமக்களுக்கு எவ்வித பாதிப்பும் இல்லாத வகையில் அனைத்து நகர்ப்புர உள்ளாட்சி அமைப்புகளின் அலுவலர்கள் பணியாற்றிட வேண்டும்.

இவ்வாறு அமைச்சர் கே.என்.நேரு அறிவுறுத்தினார்.

அமைச்சர் பி.கே.சேகர்பாபு முன்னிலை! சரிதா மகேஷ்குமார் எம்.சி. தலைமை!

கொளத்தூர் தொகுதியில் தூய்மைப் பணியாளர்களுக்கு 3 நாள் தொடர் மருத்துவ முகாம்!

அமைச்சர் மா.சுப்பிரமணியன் துவக்கி வைக்கிறார்! மேயர் பிரியா ராஜன் பங்கேற்பு!

சென்னை, நவ. 1

சென்னை கிழக்கு மாவட்டம், கொளத்தூர் தொகுதியில் பணியாற்றும் மாநகராட்சி தூய்மை பணியாளர்களுக்கு தொடர்ந்து 3 நாட்கள் முழு உடல் பரிசோதனை மருத்துவ முகாம் 3.11.2023 வெள்ளிக்கிழமை அன்று காலை 9 மணிக்கு, சென்னை, ஜி.கே.எம். காலனி, பட்டுமேடு நாடார் திருமண மண்டபத்தில் நடைபெறுகிறது.

தலைமை செயற்குழு உறுப்பினர், 6 வது மண்டலக்குழுத் தலைவர் சரிதா மகேஷ்குமார் தலைமை வகிக்கிறார்.

மாவட்டக் கழகச் செயலாளர், அமைச்சர் பி.கே. சேகர்பாபு, எ.நாகராசன் எம்.சி, ஐ.சி.எப்.வ.முரளி தரன், கே.சந்துரு, தேவஜவகர், புனிதவதி எத்திராசன், சி.மகேஷ்குமார், எஸ்.பன்னீர்செல்வம், எஸ்.தனசேகர், துரைகண்ணன், ஆர். எஸ்.சித்திக், ம.அசோக்குமார், சுதா தீனதயாளன், ராஜேஸ்வரி ஸ்ரீதர் ஆகியோர் முன்னிலை வகிக்கின்றனர்.

எம்.தாவுத்பீ எம்.சி, கே.சாரதா எம்.சி, யோக பிரியா தனசேகர் எம்.சி, பி.அமுதா பொன்னிவளவன் எம்.சி, சி.ஸ்ரீதணி எம்.சி. ஆகியோர் வரவேற்புரை ஆற்றுகின்றனர்.

இம்மருத்துவ முகாமினை மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் மா.சுப்பிரமணியன் துவக்கி வைக்கிறார்.

இந்நிகழ்ச்சியில் மேயர் பிரியா ராஜன், கலாநிதி வீராசாமி எம்.பி, இரா.கிரிராஜன் எம்.பி, ப.தாயகம் கவி எம்.எல்.ஏ, ஜோசப் சாமுவேல் எம்.எல்.ஏ, அ.வெற்றிஅழகன் எம்.எல்.ஏ, இ.பரந்தாமன் எம்.எல்.ஏ, ப.ரங்கநாதன், கே.எஸ்.ரவிச்சந்திரன், பி.கே. மூர்த்தி, தமிழன் பிரசன்னா, சங்கரி நாராயணன், எஸ்.மணிமுடி,

கவிஞர் நன்மாறன், எம். விஜயகுமார், கே.எஸ்.எம். நாதன், என்.பி. எம்.ஷேக் அப்துல்லா, பரிதி இளம் சுருதி எம்.சி, ஆர்.வரதன், வே.உமாகாந்த் மற்றும் கழக நிர்வாகிகள், அனைத்து அணிகளின் அமைப்பாளர்கள் மற்றும் துணை அமைப்பாளர்கள், கழக முன்னோடிகள் பலர் கலந்து கொண்டு சிறப்பிக்கின்றனர்.

69 வது வட்டக் கழகச் செயலாளர் எம்.ஜெ.சி. பாபு, 69 (அ) வட்டக் கழகச் செயலாளர் பி.அதிபதி ஆகியோர் நன்றி கூறுகின்றனர்.